## செல்வத்தின் மீதான கடமைகள்

அல்லாஹ் தஆலா செல்வத்தை மக்கள் உயிர் வாழ்வதற்கான ஒரு ஆதாரமாக ஆக்கியுள்ளான். நியாயமான முறையில் தூய்மையான பொருட்களைக் கொண்டு சுகம் அனுபவிக்குமாறு கட்டளையிட்டும் உள்ளான், அத்துடன் வீண்விரயம் செய்வதையும் தடுத்துள்ளான். அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

ٱلَّذِينَ يَبْخَلُونَ وَيَأْمُرُونَ ٱلنَّاسَ بِٱلْبُخْلِ وَيَكْتُمُونَ مَآ ءَاتَىٰهُمُ ٱللَّهُ مِن فَضْلِهِۦ ۗ وَأَعْتَدْنَا لِلْكَٰفِرِينَ عَذَابًا مُّهِينًا ﴿٣٧﴾ (النساء:37)

பொருள்: அவர்கள் தாமும் உலோபிகளாயிருந்து பிற மக்களையும் உலோ பித்தனம் செய்யுமாறு ஏவுவார்கள், மேலும், அல்லாஹ் தன் அருளிலிருந்து அவர்களுக்கு வழங்கியுள்ள செல்வங்களை மறைப்பார்கள். (இத்தகையவர் களையும் அல்லாஹ் நேசிப்பதில்லை) இத்தகைய நன்றிகெட்டவர்களுக்கு நாம் இழிவு தரும் வேதனையைத் தயார் செய்து வைத்திருக்கின்றோம் (அந்நிசா:37).

ஜ்ஸகாத் கொடுப்பது செல்வம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் இருக்கு மானால், சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கடமையாக்கப் பட்டுள்ளது. செல்வந்தர்களிடமிருந்து ஜ்ஸகாத் பெறப்பட்டு ஏழை மக்களி டையே அது பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இஸ்லாம் ஜ்ஸகாத் எங்கு செலவிடப் படவேண்டும் மற்றும் அதனைப் பெற்றுக்கொள்ளும் தகுதியுடையவர்கள் யார் யார் என்பதை மிகத்தெளிவாகவே விளக்கிக் கூறுகின்றது. அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:

إِنَّمَا ٱلصَّدَقَٰتُ لِلْفُقَرَآءِ وَٱلْمَسَٰكِينِ وَٱلْعَٰمِلِينَ عَلَيْهَا وَٱلْمُؤَلَّفَةِ قُلُوبُهُمْ وَفِى ٱلرِّقَابِ وَٱلْغَٰرِمِينَ وَفِى سَبِيلِ ٱللَّهِ وَٱبْنِ ٱلسَّبِيلِ ۖ فَرِيضَةً مِّنَ ٱللَّهِ ۗ وَٱللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٦٠﴾ (التوبة:60)

பொருள்: இந்த தானதர்மங்களெல்லாம் ஏழைகள், வறியவர்கள், இந்த தான தர்மங்களை வசூலிக்கவும் பங்கிடவும் நியமிக்கப்பட்ட பணியாளர்கள் மற் றும் உள்ளங்கள் இணக்கமாக்கப்படவேண்டியவர்கள் ஆகியோருக்கும், பிடரி களை விடுவிப்பதற்கும், கடனாளிகளுக்கும் மற்றும் இறைவழியில் செலவு செய்வதற்கும், பயணிகளுக்கும் உரியனவாகும். இது அல்லாஹ்வினால் விதிக் கப்பட்ட கடமையாகும், மேலும், அல்லவாஹ் யாவற்றையும் அறிந்தோனும் நுண்ணறிவாளனுமாயிருக்கின்றான் (அத்தவ்பஹ்:60)

இஸ்லாமிய மார்க்கச்சட்டமான ஷரீஅத் எவற்றின் மீதெல்லாம் ஜ்ஸகாத் கடமையாக்கப்பட்டுள்ளது மற்றும் ஒவ்வொரு வகையான செல்வத்தின் அளவும் நிர்ணயித்தும், வறையறுத்தும் தந்துள்ளது. அவையாவன: ரொக்கமான இரு செல்வங்களான (தங்கம் மற்றும் வெள்ளி), கால்நடைகள் (ஒட்டகம், மாடுகள், எருமை மாடுகள், செம்மரியாடுகள், வெள்ளாடுகள் ஆகியன), விவசாயப் பொருட்கள், வியாபாரச் சரக்குகள், கனிமங்கள் (அதாவது பூமிக்கு அடியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் செல்வங்கள், உதாரணமாக, பெட்ரோல், கனிமங்கள் ஆகியன).

ஜ்ஸகாத் முஸ்லிம்களுடைய ஒருமைப்பாடு மற்றும் சமூக அமைப்பின் சின்னமாக இருக்கின்றது. இந்த சமூக ஒருமைப்பாடு இஸ்லாத்தின் குறிக்கோள் மற்றும் கொள்கைகளில் ஒரு அடிப்படையான குறிக்கோளாக உள்ளது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَثَلُ الْمُؤْمِنِيْنَ فِيْ تَوادِّهِمْ، وَتَرَاحُمِهِمْ، وَتَعَاطُفِهِمْ مَثَلُ الْجَسَدِ إِذَا اشْتَكَى مِنْهُ عُضْوٌ تَدَاعَى لَهُ سَائِرُ الْجَسَدِ بِالسَّهَرِ وَالْحُمَّى (البخاري،مسلم)

பொருள்: முஸ்லிம்களுக்கிடையிலான பரஸ்பர அன்பு, கருணை மனப்பான்மை மற்றும் பாச உணர்வின் உதாரணம் ஒரு மனித உடலைப்போன்றது (அதாவது ஈமான்கொண்ட முஸ்லிம்கள் அனைவருமே ஒரே கட்டமைக்கப்பட்ட உடலைப்போன்றவர்கள்), உடலின் எந்த ஒரு பகுதியும் நோவினால் பாதிக்கப்படும்போது அந்த உடல் முழுவதுமே அதனை உணர ஆரம்பித்துவிடுகின்றது, அதற்குத் தூக்கமும் வருவதில்லை, ஜுரத்தினைப்போன்ற பாதிப்பும் ஏற்பட்டுவிடுகின்றது (புக்ஹாரி, முஸ்லிம்). (இவ்வகையில், இந்த உதாரணமானது ஒரு ஈமான் கொண்டவர் இன்னல்களால் பாதிக்கப்படும்போது, குறிப்பாக, இறைமறுப்பாளர்களிடமிருந்து ஒரு தீங்கு ஏற்படும்போது அனைத்து முஸ்லிம்களும் நிம்மதியிழந்துவிட்டவர்களாக, அதனை உணர்ந்து அதிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கான ஆவன செய்யவேண்டும்).

ஜ்ஸகாத் முஸ்லிம்களிடையே பரஸ்பர அன்பை ஏற்படுத்துகின்றது, ஏனெனில், இது செல்வந்தர்களுடைய செல்வத்தினைத் தூய்மையானதாக ஆக்குகின்றது மற்றும் அதனை நஷ்டங்களிலிருந்து பாதுகாக்கின்றது, அத்துடன் அவர்களுடைய மனதில் ஏழை எளிய முஸ்லிம்களைப்பற்றிய ஒரு பொறுப்பினையும் உணர்த்துகின்றது. ஜ்ஸகாத்தின் மூலம் ஏழைகளின் தேவைகள் பூர்த்தியாகின்றன மற்றும் அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து கஷ்டங்களும்

இன்னல்களளும் நீக்கப்படுகின்றன மற்றும் இதன் மூலம் அல்லாஹ்வினால் அருளப்பட்ட அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துவதாகவும் அமைகின்றது.

ஜ்ஸகாத் செலுத்துவதன் மூலம் சமுதாயத்தின் மிகக் கொடூரமான பிணி களான வெறுப்பு, பொறாமை, பகைமை, கர்வம், நயவஞ்சகம் ஆகிய சமு தாயத்தையே சீர்கெடவைக்கும் தீமைகள் தலை தூக்கித் தனி நபர் மற்றும் சமூகத்தையே நஷ்டத்தில் ஆழ்த்திவிடுகின்றன. ஜ்ஸகாத் மூலம் ஏழைகளின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாதுபோகுமேயானால், செல்வந் தர்களிடமிருந்து அத்தேவைகள் பூர்த்தி செய்யப்படும் அளவிற்கு பொருள் பெறப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரத்தைப்பற்றிய அச்சம் நீங்கும் வகை யில் அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும். இவ்வகையில், அவர்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எந்த அளவிற்கு நிதி தேவைப்படு கின்றதோ அதுவே தானதர்மங்களின் அளவுமாகும். இறைத்தூதர் ﷺ அவர் கள் கூறுகிறார்கள்:

**إنَّ فِيْ الْمَالِ حَقاً سِوَى الزَّكَاةِ** செல்வத்தில் ஜ்ஸகாத்தைத்தவிர (தானமும்) கொடுக்க வேண்டியிருக்கின்றது, அதன்பின் கீழக்காணும் வசனத்தை ஓதினார்கள்:

لَّيْسَ ٱلْبِرَّ أَن تُوَلُّوا۟ وُجُوهَكُمْ قِبَلَ ٱلْمَشْرِقِ وَٱلْمَغْرِبِ وَلَٰكِنَّ ٱلْبِرَّ مَنْ ءَامَنَ بِٱللَّهِ وَٱلْيَوْمِ ٱلْـَٔاخِرِ وَٱلْمَلَٰٓئِكَةِ وَٱلْكِتَٰبِ وَٱلنَّبِيِّۦنَ وَءَاتَى ٱلْمَالَ عَلَىٰ حُبِّهِۦ ذَوِى ٱلْقُرْبَىٰ وَٱلْيَتَٰمَىٰ وَٱلْمَسَٰكِينَ وَٱبْنَ ٱلسَّبِيلِ وَٱلسَّآئِلِينَ وَفِى ٱلرِّقَابِ وَأَقَامَ ٱلصَّلَوٰةَ وَءَاتَى ٱلزَّكَوٰةَ وَٱلْمُوفُونَ بِعَهْدِهِمْ إِذَا عَٰهَدُوا۟ ۖ وَٱلصَّٰبِرِينَ فِى ٱلْبَأْسَآءِ وَٱلضَّرَّآءِ وَحِينَ ٱلْبَأْسِ ۗ أُو۟لَٰٓئِكَ ٱلَّذِينَ صَدَقُوا۟ ۖ وَأُو۟لَٰٓئِكَ هُمُ ٱلْمُتَّقُونَ ﴿١٧٧﴾ (البقرة:177)

பொருள்: நற்செயல் என்பது உங்களுடைய முகங்களைக் கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல, மாறாக, அல்லாஹ்வையும் இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன் முழுமையாக நம்புவதும், மேலும், (அல்லாஹ்வின்மீதுள்ள நேசத்தின் காரண மாகத்) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக் கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்போருக்கும், அடிமை களை மீட்பதற்கும் வாங்குவதும், மேலும், தொழுகையை நிலைநாட்டி ஜ்ஸகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும், வாக்குறுதி அளித்தால் தம் வாக்குகளை நிறைவேற்றுபவர்களும் வறுமை மற்றும் துன்பங் களின்போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின்

*போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புணண்ணியவான் கள் ஆவர். இவர்களே உண்மையாளர்கள், மேலும், இஅவர்களே இறையச்ச முடையவர்கள் (அல் பஃகரஹ்:177)*

*ஒரு மிகப்பெரும் பேரிடர் ஏற்பட்டுவிடுமானால், உதாரணமாக, ஒரு முஸ் லிம் நாட்டின்மீது எதிரிகள் ஆக்கிரமித்துப் படையெடுத்துவிட்டால் அல்லது முஸ்லிம் ஆட்சியாளர்கள் தங்களிடம் தேவைப்படும் பொருள் மற்றும் ஆதா ரங்களில்லாத நிலையில் எதிரிகளைத் தடுத்து நிறுத்தும் நிலையில் இல்லா திருந்தால் அனைத்து முஸ்லிம் செல்வந்தர்கள்மீதும் அவர்கள் ஏற்கனவே தங் கள்மீதான ஜ்ஸகாத்தைக் கொடுத்துவிட்டிருந்தாலும்கூட அந்த எதிரிகளைத் தடுத்து நிறுத்தி அவர்களுக்கு எதிராக போரிடுவதற்கும் படைகளை ஆயத்தப் படுத்தி முற்படுவதற்குத் தேவையான அளவிற்கு பொருள் வழங்குவது கடமை யாகிவிடும் என்று உலமாப் பெருமக்கள் ஒத்தக் கருத்தினைக் கொண்டிருக் கின்றனர். இமாம் மாலிக் (ர) அவர்கள் கூறுகிறார்கள், மக்கள் தங்களுடைய கைதிகளின் விடுதலையைப் பெற்றுத்தருவது கடமையானதாகும், அதற்காக அவர்களுடைய செல்வம் அனைத்துமே செலவிடவேண்டியிருந்தாலும் சரியே.*

* * *